# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 22.05.2025**

**CC. 91/2024**

**அ.சா.5 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.ஆ.3 முதல்தகவல் அறிக்கையில் சம்பவம் குறித்து தகவல் கிடைத்த நாள் மற்றும் நேரம் 07.05.2013 மற்றும் 14.15 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 07.05.2013 அன்று காலை 8 மணிக்கு உதவி ஆய்வாளரின் உத்தரவுப்படி நான் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ஆசீர்வாதன் என்பவரிடம் சம்பவம் குறித்து விசாரித்து 10 மணிக்கு புகார்வாக்குமூலம் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கையில் சம்பவம் குறித்து தகவல் கிடைத்த நாள் நேரம் மற்றும் நான் அ.சா.ஆ.3 பதிவுசெய்த நாள் நேரம் ஆகியவற்றில் முரண்பாடு உள்ளது என்றால் சரியல்ல. போலீசார் காவல்நிலையத்தை விட்டு வெளியே செல்லும்போது Movement register ல் பதிவு செய்யவேண்டும் என்றால் சரியல்ல. காவல்நிலையத்தை விட்டு போலீசார் வெளியே செல்லும்போது அது குறித்த பதிவு General Diary ல் இடம்பெற்றிருக்கும். 07.05.2013 அன்று மேற்படி புகார் வாக்குமூலம் பதிவுசெய்வதற்கு நான் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்றதுதொடர்பாக General diary ல் உள்ள பதிவு குறித்து விசாரணையில் கூறினேனா என்றால் கூறவில்லை. 07.05.2013 அன்று நான் பணியில் இல்லை என்றாலும், அன்றய நாள் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு நான் செல்லவில்லை என்றாலும் சரியல்ல. நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை பொய்யானது மற்றும் முரண்பாடு கொண்டது என்றால் சரியல்ல. புலன்விசாரணை அதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யாக முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.